செய்தி வெளியீடு எண்.588 நாள்.19.7.2008

# பத்திரிகை செய்தி

தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள சாலை விபத்துக்களில் உயிர் இழப்புகள் மற்றும் உடல் உறுப்பு இழப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஆராயும்பொழுது பெரும்பான்மையான விபத்துக்கள் ஓட்டுநர்களின் திறன் தரக்குறைவினாலும், ஓட்டுநர்களின் அசாக்கிரதையாலும் சாலைகளை உபயோகிப்போரிடையே போதுமான அளவு விழிப்புணர்வு இல்லாததாலும், குறிப்பாக சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றிச் செல்வதாலும் நிகழ்கின்றன எனத் தெரிய வருகிறது. ஓட்டுநர் தரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழக அரசு பல்வேறு கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

1) ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு அவைகளுக்கு விரிவான வழிகாட்டுதல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
2) ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளின் பயிற்சியாளர்களுக்கு சிறப்பு பயிற்சியளிக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.
3) பழகுநர் உரிமம் மற்றும் நிரந்தர உரிமம் வழங்குதலில் தேர்வு நடத்தும் விதிமுறைகளில் சில நவீன முறைகளை அறிமுகப்படுத்தி அவற்றை அமலாக்கம் செய்திடவும் பயிற்சி பள்ளிகளில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளின் தரத்தை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
4) இது போன்று பல்கலைக் கழகங்கள் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் அனைத்து வசதிகளுடன் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் துவங்க ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு புதிய வழிமுறைகளில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் விதிமுறைகளை புகுத்தும் முயற்சிகளுக்கு சில சட்டச் சிக்கல்கள் பயிற்சி பள்ளி நிறுவனங்களால் ஏற்பட்டுத்தப்பட்டு வருவதை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. இத்தடைகளை நீக்க முயற்சிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாலை விபத்துகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமான அதிக பாரம் ஏற்றுவது தொடர்பாக குறிப்பாக ஆட்டோரிக்சாக்களிலும், சேர் ஆட்டோக்களிலும் அதிக பயணிகள்

ஏற்றிச் செல்வது மற்றும் சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றுவது ஆகியவற்றை தடை செய்ய சமீப காலங்களில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை மாநகரத்தை பொறுத்த வரையில் போக்குவரத்து துறை மற்றும் காவல் துறையினர் கூட்டாக இணைந்து வாகன தணிக்கைகள் செய்து அதிகபாரம் ஏற்றுவது உட்பட பிற கடுமையான குற்றங்களுக்கு சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குற்றம் புரிவோர் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் 1988ம் வருடத்திய மோட்டார் வாகன சட்டம் பிரிவு 113 மற்றும் 114ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப, சரக்கு வாகனங்களின் மீது மேற்படி நிபந்தனைகளை மீறும் போது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதிகபட்ச அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கடந்த ஆண்டிலேயே போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு சென்னை போக்குவரத்து ஆணையர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டு அதிகபட்ச தண்டனைகள் வழங்கி ரூ.5000 வரை அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் சரக்கு வாகன உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகள் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களை சந்தித்து அதிக பாரத்திற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். போக்குவரத்து துறையும், இதனை சென்னை துறைமுக கழகத்தினருக்கும் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் தெரிவித்து அனுமதிக்கப்பட்ட எடைக்கு மேல் அதிக பாரம் ஏற்றுவதை அனுமதிக்காமல் இருக்கவும் அவ்வாறு மீறும் வாகனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் விபரங்களை போக்குவரத்து துறைக்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக தெரிவிக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

எனவே, போக்குவரத்து நிறுவனங்கள் லாரி உரிமையாளர்கள் ஆகியோர் தங்களது சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றிச் செல்லக் கூடாது என இதன் மூலம் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றனர். இதனையும் மீறி அதிக பாரம் ஏற்றிச் செல்லும் சரக்கு வாகனங்கள் சோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டால் வாகனங்களின் மீதும், அனுமதிகளின் மீதும், அனுமதிதாரர்கள் மீதும் மோட்டார் வாகனச் சட்டப் பிரிவுகளின் கீழ் அதிகபட்ச அபராதம் மற்றும் தண்டனைகள் வழங்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.